கிழக்கின் வெற்றிப்பாதை
Negenahira Jayamaga நැගෙනහිර ජයමග







# நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயத்தில் தன்னிறைவு அடையும் கிழக்கு

“மனித வர்க்கத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படாமல் ஒரு துளி நீரைக் கூட கடலில் கலப்பதற்கு இடமளிக்க மாட்டோம்” என்று பராக்கிரமபாகு மன்னர் அன்று அறிவித்தார். அதற்கமைய, விவசாய அபிவிருத்திக்காக தூரநோக்கின் அடிப்படையில் சாத்தியமான நீர்ப்பாசன அமைப்பினை உறுதி செய்தல் மற்றும் விவசாய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை வலுப்படுத்தல் போன்ற உயரிய செயற்றிட்டங்களை வகுத்து கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் சேவைகளை செவ்வனே செய்து வருகிறது.

இத்திணைக்களத்தின் கீழ் 41 குளங்கள் பராமரிக்கப் படுவதனால் 33,000 ஏக்கர் விவசாயக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் 23,000 விவசாயக் குடும்பங்கள் நேரடியாக பயன்பெறுகின்றன.

மூன்று தசாப்த கால யுத்த சூழல் மற்றும் பாரிய வெள்ள அனர்த்தங்கள் காரணமாக கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குளங்கள், அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகின. அவற்றைப் புனரமைப்பு செய்யும் சூழ்நிலையும் இல்லாதொழிந்திருந்த வேளையில் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் அரசாங்கம் அமையப் பெற்றது. அன்று முதல் இன்று வரை கிழக்கு மாகாண நீர்ப்பாசனத்துறையில் மீள் எழுச்சியை ஏற்படுத்தும் நோக்கில் சுமார் 2000 மில்லியன் ரூபா செலவில் கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குளங்கள், அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் என்பன புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

> “ கிழக்கு மாகாணத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக 41 குளங்கள் பராமரிக்கப்படுகின்றன. இதன் மூலம் 33,000 ஏக்கர் விவசாய நிலத்திற்கு தண்ணீர் வழங்கப்படுவதுடன் 23,000 விவசாயக்குடும்பங்கள் நேரடியாக நன்மையடைகின்றன ”

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் மற்றும் ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள மீயான்கல் குளம் மற்றும் ஆனைசுட்டகட்டு குளம் என்பன 133 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள இக்குளங்கள் மூலம் சுமார் 2,500ஏக்கர் காணி நெற்செய்கைக்கு புதிதாக உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 2000 ஏக்கரில் பிற பயிர்ச்செய்கைகளும் செய்கை பண்ண வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக கடந்த கால வன்செயல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழும் கிரான் மற்றும் ஓட்டமாவடி பிரதேசங்களைச் சேர்ந்த 1050 விவசாய குடும்பங்கள் நேரடியாக நன்மை அடைகின்றன.

அரசாங்கம் கிழக்கு மாகாணத்தின் நீர்ப்பாசனத் துறையை மேலும் மேம்படுத்தும் முகமாக அவசர இயற்கை அனர்த்த புனரமைப்புத் திட்டத்தின் ஊடாக நீர்ப்பாசன கட்டமைப்புக்களை நிர்மாணிக்கவும் புனரமைப்பு செய்யவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்தடிப்படையில் இம்மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுக்குமாக 268 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு வேலைகள் யாவும் நிறைவடைந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 வேலைகளுக்காக சுமார் 72 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் குறிப்பாக கடுக்காமுனை குளத்தின் வலதுகரை கால்வாய் மற்றும் குளக்கட்டுகள் சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. கமநலத் திணைக்களத்தின் பராமரிப்பின் கீழ் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கேணிமடு குளமானது சுமார் 11.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு இருக்கின்றன.

இவ்வாறே திருகோணமலை மாவட்டத்தில் 17 வேலைகளுக்காக சுமார் 82 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் குறிப்பாக மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இலக்கந்தை குளமானது சுமார் 13 மில்லியன் ரூபா செலவிலும், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரியகுளம் - பொக்கன் குளம் சுமார் 9.5மில்லியன் ரூபா செலவிலும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மகளம்பத்து குளம் சுமார் 6.5 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறே அம்பாறை மாவட்டத்தில் 10 வேலைகளுக்காக சுமார் 114 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள செம்மணி குளம் 31 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் மேலதிகமாக 200 ஏக்கர் விவசாய காணிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக் கொள்ளும். இதன் பயனாக 350 விவசாயக் குடும்பங்களும் நன்மை பெறுவர். மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டுமான வேலைகளின் தரத்தினை உறுதி செய்து கொள்வதற்காக மூன்று மாவட்டங்களிலுமுள்ள பிரதி நீர்பாசனப் பணிப்பாளர் பணிமனைகளிலும் பொறியியல் ஆய்வுகூடங்கள் செயற்படுகின்றன. குறிப்பாக அம்பாறை பிரதி நீர்பாசனப் பணிப்பாளர் பணிமனைக்கான பொறியியல் ஆய்வு கூடத்திற்கான கட்டடம் அவசர இயற்கை அனர்த்த புனரமைப்புத் திட்டத்தின் ஊடாக சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மூன்று பொறியியல் ஆய்வு கூடங்களுக்கும் மிக முக்கியமாக தேவைப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதனால் மண் மற்றும் கொன்கிறீட் வேலைகளின் தரக்கட்டுப்பாடு உறுதி செய்யப்படுவதன் மூலம் சிறந்த சேவை விவசாயிகளுக்கு சென்றடைகின்றது. நில வளத்தையும், நீர் வளத்தையும் தலைசிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக பல்வேறு ஆற்றுப்படுகைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய பிரதான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் ஊடாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படும் புதிய காணிகளுக்கும், தற்போது செய்கை பண்ணப்படுகின்ற காணிகளுக்கும் நீர்ப்பாசனம் வழங்கவென பாதுகாப்பான வடிகால் அமைப்புகள், வெள்ளத்தடுப்பு அணைகள் மற்றும் உவர் நீர் தடுப்பு அணைகளை அமைக்கும் கருத் திட்டங்கள் முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.



எந்திரி
எஸ். திலகராஜா
மாகாணப் பணிப்பாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2014ம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.